






# ஆசார்யர்களின்
# க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி

மலர் 1 இதழ் 18 30.04.2025



நமது ஆண்டவன் காத்மாண்டுவில்

ஶ்ரீமதே ஶ்ரீ வராஹமஹாதேசிகாய நம:

ஆசார்ய தேவோ பவ



# உள்ளே....

# படிக்க வேண்டிய உபதேசங்கள்

1.துலாதாரன் வரலாறு

2. ஆசார்யனிடத்தில் வேதாத்யயனம்

3. வேதத்திற்கு அங்கமான சாஸ்த்ரங்கள் ஆறு

4. தைத்திரியோபணிஷத்தில் 12 அனுவாகங்கள்

5.ஸ்ரீ உபநிஷத் பாஷ்யகாரரர் வைபவம்

(ஸ்ரீ உவே நாவல்பாக்கம் வாஸுதேவாசார்யார், திருவனந்தபுரம்)



# துலாதாரன் வரலாறு

ஜாஜலி என்னும் முனிவர் பிறரால் செய்ய முடியாத கடுந்தவம் புரிந்தார். அசையாமல் நெடுங்காலம் அமர்ந்தே இருந்தபடியால் சடைகள் வளர்ந்து அவற்றில் சிட்டுக் குருவிகள் கூடுகட்டி வாழ ஆரம்பித்தன. முட்டையிடல், குஞ்சு பொரித்தல் எல்லாம் சடைகளிலேயே நடந்தன. குருவிகளின் குடும்பம் பெருகி எல்லாம் அங்கேயே வாழ்ந்தன. அடிக்கடி குருவிகள் வெளியே போவதும் இரவில் வந்து தங்குவதும் பல நான் வெளியே சுற்றிவந்து மறுபடி அங்கே தங்குவதும் வழக்கமாயின எதற்கும் முனிவர் அசைவதில்லை. அப்பொழுது அவருக்குக் கர்வம் ஏற்பட்டது. 'பற்பல குருவிகளுக்குத் தலையிலேயே இடம் கொடுத்து வாழச் செய்யும் இந்தத் தர்மம் வேறு யாரால் செய்ய முடியும்? என்று நினைத்தார். தர்மத்தின் உச்ச நிலையைத் தாம் பெற்றுவிட் டதாய் வெளிப்படையாகப் புகழ்ந்து கொண்டார். அப்பொழுது ஆகாயத்தில் ஓர் அசரீரி வாக்கு முனிவரே! தர்மத்தில் வாரணாஸியில் வாழும் துலாதாரனுக்கு ஈடாகமாட்டீர். அவன் உம்மைப் போல் தன்னைப் புகழ்ந்து கொள்பவனல்லன்' என்று எழுந்தது. அதைக் கேட்டுப்புகழ்ந்து கொள்பவனல்லன்' என்று எழுந்தது. அதைக் கேட்டுப் பொறாமை கொண்ட ஜாஜலி முனிவர் புறப்பட்டு நெடுநான் கழித்துக் காசியை அடைந்து வைசிய குலத்தில் பிறந்த துலாதாரன் இருக்குமிடம் தேடிக் கண்டுபிடித்தார். அவன் பலசரக்குக் கடையில் அமர்ந்து பண்டங்களை எடை போட்டு விற்றுக் கொண்டிருந்தான். முனிவரைக் கண்டவுடன் அவன் மகிழ்ச்சியுடன் வந்து வரவேற்று உபசரித்தான். முனிவரிடம் அவர் தவம் புரிந்தது தொடங்கி ஆகாயவாணியைக் கேட்டுப் பொறாமையோடு தன்னைப் பார்க்க வந்தது வரை உள்ள செய்திகளைத் துலாதாரன் தானே கூறி இப்பொழுது அவர் வேண்டுவதைச் செய்யப் பாரிப்பதாய்க் கூறினான். ஆச்சரியம் கொண்ட முனிவர் வாணிபம் செய்யும் அவனுக்கு இத்தகைய பெருமை வந்த காரணத்தை முதலில் கேட்டுப் பின் தர்மங்களைக் கேட்கிறார். துலாதாரன் **பிராணிகளுக்கு நன்மை புரிதல், தீங்கு கருதாமை - எளிய வாழ்க்கை, பிறரைப் பழியாமை - ஆசையின்மை - ஆசாரத்தின் அவசியம், அபயமளித்தல்** முதலிய **தர்மங்களை** அந்தணரான முனிவருக்கு உபதேசித்துத் தெளிவித்தான்.

(பாரதம் - சாந்திபர்வம் அத்யாயம் 267 -270)



# ஆசார்யனிடத்தில் வேதாத்யயனம்

ஆசார்யனிடத்தில் வேதாத்யயனம் மட்டும் செய்திட்டு வருவது போதாது. கடைசியில் அவரிடமிருந்து நல் வார்த்தைகளைக் கேட்டே வரவேண்டும். அவர் சீடருக்கு உபதேசிக்க வேண்டுவன என்னவெனில் - 'உண்மையைச் சொல். தர்மத்தையநுஷ்டி. அத்யயனத்தை விடாதே. குருதக்ஷிணை ஸமர்ப்பித்துப் போய் சந்ததி விருத்தியுண்டாகும்படி விவாஹம் செய்துகொள். யோக க்ஷேமங்களுக்கு வேண்டுவனவற்றில் உபேக்ஷை கொள்ளாதே. தாயும், தந்தையும், குருவும், அதிதிகளுமே தெய்வமென்றிரு. தேவ பித்ரு கார்யங்களை விடலாகாது. நாங்கள் செய்வதெல்லாம் சரியென்று முடிவு செய்து கொள்ளாமல் எங்கள் வைதிக தர்மானுஷ்டாநங்களில் எவற்றிற்கு ஒருவித குற்றமுமில்லையோ, எவை ஸதாசாரங்களோ, அவற்றை மட்டுமே நீ செய்யவேண்டும். நமக்கும் மேல் பெரியோர் உண்டு. அவர்கள் இருக்குமிடத்தில் அடக்க ஒடுக்கத்தோடு இருக்கவேண்டும். தானம் செய்யும்போது ஊற்றத்துடனும், கொடுக்கும் வஸ்துவில் பற்றற்றும், தன் ஸம்பத்துக்குத் தக்கபடி யாகவும், அளிப்பது அற்பமென்று வெட்கத்துடனும், சாஸ்த்ரோக்தமாய் நடைபெற வேண்டுமே என்கிற பயத்துடனும், ஸங்கல்ப பூர்வமாய் தெளிந்து தானம் செய்ய வேண்டும். சாஸ்த்ரங்களில் ஓதியுள்ள க்ரியைகளிலோ, ஆசாரங்களிலோ எதை எப்படி யநுஷ்டிப்பது என ஸந்தேஹம் ஏற்பட்டால், அது விஷயத்திலே விசாரம் செய்யத் திறமை வாய்ந்தவராய், பண்டிதர்களாய்
ஆசாரசீலராய் ஆக்ரஹமற்றவர்களாயுமுள்ள பெரியோர்களின் நடத்தையை யொத்து நடந்துகொள். துராசாரிகளென்று நிந்திக்கப்பட்டவர்கள் உண்டாகில் அவர்களிடத்தில் முன்சொன்ன வண்ணமுள்ள பெரியோர்கள் எங்ஙனம் நடந்து கொள்கிறார்களோ, அங்ஙனம் நடந்து கொள். இதுதான் வேதரஹஸ்யம். இதைத்தான் பெரியோர்களும் கடைசியாகச் சொல்வது. இதை இப்படியே அறியவேண்டும். அனுஷ்டானத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்றது.
இவ்வளவு விஷயங்களை உபதேசித்து சாந்தி பாடத்துடன் சிக்ஷாவல்லீ முடிவுற்றது.



## வேதத்திற்கு அங்கமான சாஸ்த்ரங்கள் ஆறு.

அவற்றிலொன்றான சிக்ஷையென்ற சாஸ்திரத்திலே வர்ணம், ஸ்வரம், ஹ்ரஸ்வ தீர்க்காதி மாத்திரை, உச்சரிப்பதற்கு வேண்டிய ப்ரயத்ன பலம் (வலிவு), ஸாம, ஸம்ஹிதை எனப்படும் ஸந்தானம் என்றவை கூறப்பட்டுள்ளன. இவற்றில் ஸம்ஹிதா விஷயமான ஓர் உபாஸனத்தைச் சொல்லுகிறோம். ஸம்ஹிதையாவது இணைப்பன்றோ. இணைவதற்கு இரண்டு வர்ணங்கள் - அக்ஷரங்கள் - இரண்டு உரு வேண்டும். அவையே பூர்வ ரூபமும் உத்தர ரூபமும். அவற்றைச் சேர்க்கும் வழியென்ற ஸந்தாந மொன்றுண்டு. அதன் படி இணைத்து ஏற்பட்ட ரூபம் ஸந்தியென்றும் ஸம்ஹிதையென்றும் சொல்லப்படும்.இந்த பூர்வ ரூபம், உத்தரரூபம். ஸந்தி, ஸந்தானம் என்ற நான்கு வஸ்துக்களிலே லோக ஸம்பந்தமாயும், சோதி ஸம்பந்தமாயும், வித்யா ஸம்பந்தமாயும், ப்ரஜா ஸம்பந்தமாயும் சாரீர ஸம்பந்தமாயும் சிந்தனைகளை விரித்துரைத்திருக்கிறபடி செய்பவருக்கு ப்ரஜை. பசுக்கள், வேதார்த்த ஞானத்தின் சிறப்பு, அன்னம், ஸுவர்க்கம் என்ற பலன்கள் உண்டு. இந்த ஸம்ஹிதா பாவனையின் வகைகளுக்கு மஹாஸம்ஹிதைகள் எனப் பெயராம்.' என்று கூறி உபநிஷத்து அவ்வகைகளை மேலே விரித்துக் கூறிற்று. பிறகு ப்ரணவத்தைத் துதித்து அதன் அநுக்ரஹத்தினால் தனக்கு அறிவும், ஆரோக்யமும், இனிமையாகப் பேசும் திறமையும், எல்லாம் கேட்கும்படி காதிற்கு வலிமையும் வரவேணுமென்று கோர வேண்டுமென்றது. பிறகு லஷ்மீஸ்துதி, ஊண், உடை, பசுக்கள், ஸத்துக்களின் சேர்க்கை, கீர்த்தி, பெருமை, பெரிய ஐச்வர்யமென்ற இவையும், இவ்வைச்வர்யக் கடலிலே மூழ்கியிருக்கும் தனக்கு தேஹாத்ம சுத்தியும், எல்லா வேத வித்துக்களும் ஈடுபட்டு வரும்படியான ஏற்றமும் எல்லாம் வேண்டுமென்று கேட்கிற வகையை வர்ணித்தது.



# தைத்திரியோபணிஷத்தில்
# 12 அனுவாகங்கள்

தைத்திரியோபணிஷத்தில் முதல் சிக்ஷா வல்லியில் "சம் நோமித்ர:' என்று ஆரம்பத்து 12 அனுவாகங்கள் உள்ளன; அவற்றில் வரிசையாக சொன்ன விஷயங்களின் பட்டியல்-

1. வித்யைக்கான தடை நீக்கி மங்களம் உண்டாக்கும் சாந்தி மந்த்ரம்

2. வேத- உச்சாரணம் பற்றியதான சிக்ஷா க்ரந்த விஷயம்

3. உலகம் முதலியதில் ஸம்ஹிதா (சேர்க்கை) பற்றி த்யானம் செய்வதற்கான உபதேசம்

4. ப்ரஹ்மவித்யைக்காக ப்ரணவ-ப்ரார்த்தனா

5. ப்ரஹ்மவித்யைக்கு அங்கமான வ்யாஹ்ருதி-உபாஸனம்

6. பர ப்ரஹ்ம உபாஸனம் - வித்யை

7. ஐந்தைந்தாக ஆறு விஷயங்கள் பற்றிய உபாஸன உபதேசம்

8. ப்ரணவம் பற்றிய பெருமை

9. ப்ரஹ்மவித்யைக்கு அங்கமான ஜப மந்த்ரம்

10. ப்ரஹ்மவித்யைக்கு அங்கமாக செய்ய வேண்டிய கர்மங்கள்

11. வேத அத்யயனம் செய்து முடித்த சிஷ்யனுக்கு ஆசார்யன் செய்யும் உபதேசம். (இது மிகவும் முக்கியமானது; உரையில் காண்க)

12. அத்யயன முடிவில் சாந்தி மந்த்ரம்

இரண்டாவது ஆனந்தவல்லியில் ஸஹ நாவவது' எனும் சாந்தி பாடத்துடன் ஆரம்பம்; அடுத்து பர ப்ரஹ்மம் பற்றி அற்புத விளக்கம்; அதில் உலகின் காரணமானது ஆத்மா என்று குறிப்பிட்ட படியால், அந்த ஆத்மா எது என்று விசாரம் ஆரம்பம்.

******************

# ஸ்ரீ உபநிஷத் பாஷ்யகாரர் வைபவம்

(ஸ்ரீ உவே நாவல்பாக்கம் வாஸுதேவாசார்யார், திருவனந்தபுரம்)

நம் ஆசார்ய பரம்பரையில் ஸ்ரீஉபநிஷத் பாஷ்யகாரரின் திருநாமம் விசேஷமாக போற்றப்பட்டு இருக்கிறது; அதற்கு காரணம் இவர் அனுக்ரஹித்த க்ரந்தங்கள்தான். சுமார் 60 க்ரந்தங்கள் இயற்றி உள்ளார். அதில் முக்யமானது உபநிஷத்துக்களுக்கு பாஷ்யம் எழுதியது. ஆகையால் உபநிஷத் பாஷ்யகாரர் என்றே திருநாமம் விளங்கிற்று.

ஸ்ரீபாஷ்யகாரர் ப்ரஹ்மஸூத்ரத்துக்கு ஸ்ரீபாஷ்யம் அருளினார் ஸ்ரீபகவத் கீதைக்கு கீதாபாஷ்யம் ஸாதித்தார்; அதே போல் இந்த ஸ்வாமி உபநிஷத்துக்களுக்கு பாஷ்யம் அருளினார்.

ஸ்ரீபாஷ்யகாரர் வேதார்த்தஸங்க்ரஹம் என்ற க்ரந்தம் அருளினார். இது உபநிஷத்துக்கு சுருக்கமான அர்த்தத்தை உடையது. இதைக் கொண்டு உபநிஷத்துக்கு முழுமையாக அர்த்தம் கொள்வதில் ச்ரமம் இருந்து வந்தது; பிற மதத்தினரும் இதனை ஒரு குறையாக நம் மதத்தில் கூறி வந்தனர்; அந்த குறை இல்லாமல் பூர்த்தி செய்தது இந்த உபநிஷத் பாஷ்யம்.

ஸ்ரீபகவத்ராமானுஜர் உபநிஷத் பாஷ்யம் அருளாத குறையை தீர்க்க முதன்முதலில் ஸுபாலோபநிஷத்துக்கு ஸ்ரீஸ்ருதப்ரகாஸிகாசார்யர் பாஷ்யம் அருளினார்; பிறகு ஸ்வாமி தேஸிகன் ஈஸாவாஸ்யோபநிஷத் பாஷ்யம் அருளினார். அதை அனுஸரித்து அவர்களை போலே இவரும் மீதம் உள்ள 13 உபநிஷத்களுக்கு பாஷ்யம் ஸாதித்தார்.

ஸ்ரீதேசிகன் ஸம்ப்ரதாய குருபரம்பரையில் ஸ்ரீதேசிகனிடமிருந்து பத்தாவதாக இந்த ஆசார்யன் வருகிறார். மிக்க வைபவத்துடன் எழுந்தருளி இருந்த ஸ்ரீஷஷ்டபராங்குஸ ஸ்வாமியின் பரிஷ்யர் ஸ்ரீதாதாசார்யஸ்வாமி; இவரது பரிஷ்யர் வாத்ஸ்ய அநந்தார்யர் (கீழ்நீர்குன்றம் ஸ்வாமி), இவருடைய பரிஷ்யர்தான் இந்த உபநிஷத் பாஷ்யகாரர்.

ஸ்ரீபரகாலமடத்தில் 15 பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஜ்ஞாநாப்தி-பரதந்த்ர பரகால-முநீஸ்வரர் ஸ்வாமியிடம் இவருக்கு ஸந்நியாஸ ஸ்வீகாரம்.

**************************